


சித்தாந்தம், வேதாந்தம், அரசியல் அக்கப்போரெல்லாம் வேண்டியமட்டும் பார்த்துவிட்டோம். இனிமேல் இ.டி.ஏ.வின் விசுவரூப தரிசனம்தான் பாக்கி. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தொன்றில் ஆரம்பித்து நாளது சர்வஜித் வருஷம் வைகாசி விசாகத் திருநட்சத்திரம் வரைக்குமான காலகட்டத்தில் சுமார் தொள்ளாயிரம் திருப்பணிகள் புரிந்திருக்கிறார்கள். இதில் மிகச் சாதாரண தேர்ட் க்ரேடு கடத்தல் தொடங்கி, பிரதம மந்திரி கொலை முயற்சிகள் வரைக்கும் வெரைட்டி உண்டு. மாதத்துக்கு எப்படியும் நாலைந்து களப்பணிகளாவது கட்டாயம் இருக்கும். இது மக்களுக்கே போரடித்துவிடாதா என்று கேட்கலாம். 'ஸ்பானிஷ் போலீஸ்காரர்கள் எப்போதும் டீக்கடையில் பேப்பர் படித்துக்கொண்டுதான் இருப்பார்களா?' என்றும் கேட்கலாம்.

இரண்டுமில்லை. தனது ஒவ்வொரு முயற்சியிலும் புதிதாக ஏதாவதொரு முத்திரை பதிப்பது இ.டி.ஏ.வின் வழக்கம். ஒரு முறை ஒரு நடவடிக்கைக்கு மேற்கொண்ட உத்தியை, அடுத்த முறை தொடமாட்டார்கள். இதற்காக 'க்ரியேட்டிவ் ஹெட்' என்று சித்திக், ராதிகா சரத்குமார் மாதிரி யாருடைய தலைமையிலாவது ஒரு டீம் இருக்கிறதா என்று கேட்காதீர்கள். தெரியாது. இ.டி.ஏ.வின் பெருந்தலைகளின் பெயர்களே கூடப் பரவலாக வெளி உலகுக்குத் தெரியாது. எல்லாரும் ஒரே மாதிரி வெள்ளை முகமூடி போட்டுக்கொண்டுதான் திரிகிறார்கள். அரசாங்கத்துக்கும் மற்றவர்களுக்கும் எழுதுகிற லிகிதங்களில் தங்கள் கீழ்ப்படிந்த...... என்று கையொப்பம் ஏதும் இடுவதில்லை. வெறுமனே இ.டி.ஏ. தலைமையகம். அவ்வளவுதான்.

பல தோல்விகள், பல வெற்றிகள். இ.டி.ஏ பொதுவாகத் தாம் மேற்கொள்ளும் தாக்குதல் முயற்சிகளின் வெற்றி, தோல்விகள் குறித்து அதிகம் கவலை கொள்வதில்லை. இல்லாவிட்டால் பிறகு எப்படி தொள்ளாயிரம் ஸ்கோர் பண்ண முடியும்? தனது செயலின் அதிர்ச்சி மதிப்பு ஒன்றே போதும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதுவும் வஞ்சனையில்லாமல்தான் இருக்கிறது. ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஸ்பானிஷ் பத்திரிகைகள் முதல் பக்கத்து எட்டு காலத்தையும் சமர்ப்பணம் பண்ணிவிடுகிறார்கள். அப்புறம் இருக்கவே இருக்கிறது பெட்டிச் செய்திகள் மற்றும் குட்டிச் செய்திகள்.

இ.டி.ஏ. செய்திகளில் வாழும் இயக்கம். ஸ்பெயின் மட்டுமல்லாமல் பிரான்ஸ், நெதர்லாந்து, ஜெர்மனி போன்ற தேசங்களிலும் இ.டி.ஏ.வின் தீவிரவாதச் செயல்களுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கிற வழக்கம் இருக்கிறது. ஏனெனில், அவர்கள் தொடும் விஷயங்கள் அப்படி.

இயக்கம் தொடங்கிய முதல் சில வருஷங்களிலேயே இந்த கவன ஈர்ப்பு அவர்களுக்குச் சாத்தியமாகிவிட்டது. முதல் முதலில் 1961-ல் ஒரு ரயிலைக் கவிழ்க்கும் முயற்சியில்தான் இ.டி.ஏ. ஈடுபட்டது. கவன ஈர்ப்பு நடவடிக்கை. அது ஒரு பயணிகள் ரயில். பாலமொன்றில் குண்டு வைத்துவிட்டுப் பல்லைக் குத்திக்கொண்டு காத்திருந்தார்கள்.

எந்தப் புண்ணியசீலனோ, கட்டிக்கொடுத்த குண்டினுள் வெடிபொருளுக்குப் பதில் வெங்காய



பக்கோடாவை வைத்திருப்பான் போலிருக்கிறது. ரயில் சமர்த்தாக மிதித்துக்கொண்டு கடந்துபோய்விட்டது. வெடிக்கும், வெடிக்கும் என்று காத்திருந்துவிட்டு இருட்டியதும் அலுத்துப்போய் வீடு திரும்பிவிட்டார்கள்.

மறுநாள் கூட்டம் கூட்டி குண்டு வெடிக்காத காரணம் குறித்து ஆலோசித்தார்கள். தன் கையே தனக்குதவி. இ.டி.ஏ.வுக்கென்று அன்றே, அங்கே, அப்பொழுதே தனியொரு வெடிமருந்துத் தயாரிப்புப் பிரிவு தொடங்கப்பட்டது. அந்த வகையில், அந்த வெற்றியடையாத முயற்சியும் ஒரு படி மேலே உயர்த்தியது என்றுதான் சொல்லவேண்டும்.

1968-ம் வருஷம் மெலிடன் மன்ஸனாஸ் (**Meliton Manzanas)** என்றொரு காவல் துறை உயரதிகாரியைக் குறிவைத்தார்கள். ஸ்பெயினில் அந்தக் காலத்தில் அவர் ஒரு சிம்ம சொப்பனமாக இருந்தவர். ரகசிய போலீஸ் பிரிவின் தலைமை இயக்குநர். ஜேம்ஸ் பாண்ட் 007 மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், சினிமாக்காரர் இல்லை. நிஜமாகவே பல சாதனைகள் புரிந்தவர். இடி.ஏ.வின் பல முக்கியப் புள்ளிகளைத் தேடித்தேடி வடை சுட்டவர். நூற்றுக்கணக்கான தீவிரவாத ஆதரவாளர்களை அப்படியே வாரிச் சுருட்டிக்கொண்டு போய் கண் காணாத பிராந்தியத்தில் வைத்து கொத்து பரோட்டா போட்டு பார்சல் பண்ணி வீட்டுக்கு கூரியரில் அனுப்பியவர். ஒரு முழு காவல் இயக்கம் செய்யவேண்டிய பணிகளைத் தனி நபராகச் செய்து முடித்தவர்.

இ.டி.ஏ. பலமுறை அவரைத் தீர்த்துக்கட்ட முயற்சி செய்து ஆளை நெருங்கக்கூட முடியாமல் இருந்தது. மாறு வேடத்தில் திரிகிற 007 அவர். பலகாலம் அவரது ஒரு போட்டோவைக்கூட இடி.ஏ.வினரால் பிடிக்க முடியாமல் இருந்தது.

ஒரு வழியாக ஆளைப் பிடித்து வட்டம் கட்டினார்கள். வீடு, குடும்பம், குழந்தை, குட்டி எல்லாவற்றைப் பற்றியும் தகவல் திரட்டினார்கள். அவரது ப்ரொஃபஷனல் ப்ரொஃபைலைப் பிடித்தார்கள். ஈ.டி.ஏ உள்ளிட்ட தீவிரவாதக் குழுக்களை அழிப்பதற்காக ஸ்பெஷல் ட்யூட்டியில் அவரை அரசாங்கம் நியமித்திருந்த விஷயத்தைக் கண்டுபிடித்தார்கள். இந்த முயற்சியில் அவர் பல சமயம் மனித உரிமை மீறல் செய்திருக்கிறார் என்கிற குற்றச்சாட்டுகள் இருந்ததையும் பிடித்தார்கள். யாரையும் கைது செய்யலாம், ரகசியச் சிறையில் பலகாலம் வைத்திருக்கலாம், தேவைப்பட்டால் போட்டுத் தள்ளலாம் என்று அநாமத்துக்கு ஏகப்பட்ட அதிகாரங்களை அவர் ரகசியமாகக் கைவசம் வைத்திருந்த விவரங்கள் கிடைத்தன.

'இனி பொறுப்பதில்லை தம்பி, எரிதழல் கொண்டு வா' என்றது இ.டி.ஏ. தலைமை. உடனடியாக அவரது வீட்டு முகவரி சேகரிக்கப்பட்டது. ஊர் ஊராக, நாடு நாடாகச் சுற்றுகிற பிரகஸ்பதி என்றாலும், என்றாவது ஒருநாள் வீட்டுக்கு வந்துதானே ஆகவேண்டும்?

ஆனால், எக்காரணம் கொண்டும் ஒன்றுமறியாத அவரது மனைவி மக்களுக்கு எவ்வித இடைஞ்சலும் செய்யவேண்டாம் என்று உத்தரவிட்டார்கள். ஏழுபேரைத் தேர்ந்தெடுத்து பொறுப்பைக் கொடுத்தார்கள்.

'நீ வெட்டுவாயோ, சுடுவாயோ, கடத்திப்போய் காக்காய்க்குப் போடுவாயோ தெரியாது. ஆனால், உனக்கு ஒரு மாதம் தான் அவகாசம். மெலிடன் மன்ஸனாஸ் அமரரானார் என்கிற செய்திதான் வரவேண்டும். தப்பித்தார் என்கிற செய்தி வந்தால், நீ தப்பிக்க முடியாது.'

தெளிவான, எளிமையான உத்தரவு. வேண்டிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு போகச் சொல்லி அனுமதி. செலவுக்குப் பை நிறைய பணம்.

திட்டத்துக்கு ‘ஆபரேஷன் ஆப்பிள்’ என்று பெயரிட்டார்கள். பாஸ்க் மொழியில் ஆப்பிள் என்றால் ஸ்பானிஷில் மன்ஸனாஸ் என்று அர்த்தம். என்ன காமெடி என்றால், ஒரிஜினல் ஸ்பெயின் மக்கள் யாருக்கும் இந்த அர்த்தம் புரியாது என்பது மட்டுமல்ல; பாஸ்க் மொழி பேசுகிறவர்களுக்கே ஆப்பிள் என்றால் என்ன அர்த்தம் என்று தெரியாது. அது பண்டைய பாஸ்க் மொழியிலிருந்து அகழ்வாராய்ந்து எடுக்கப்பட்ட ஒரு சொல். நவீன உலகத்தில் புழக்கம் கிடையாது. அந்த மொழி டிக்ஷனரியில் கூடக் கிடையாது. ஏதாவது நிகண்டைத் தேடினால் கிடைக்கும் போலிருக்கிறது.

தேடிப்பிடித்து அந்தப் பெயரை வைத்து, ஒரு மாத அவகாசத்துடன் அந்த ஏழுபேரை மேற்படி ஜேம்ஸ்பாண்ட் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

அந்த அரசு வீட்டுக்கு வில்லா அரெனா (Villa Arana) என்று பெயர். வீடு என்று சொல்லக்கூடாது. பங்களா. பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பங்களா. இருபத்து நான்கு மணி நேர செக்யூரிடி, வேட்டை நாய் சௌகரியங்கள், எடுக்க ஓர் ஆள், பிடிக்க ஓர் ஆள் என்று கிட்டத்தட்ட சுல்தான் மாதிரி வாழ்ந்துகொண்டிருந்தவர் அவர். ஈ, காக்காய் கூட சொல்லாமல் கொள்ளாமல் உள்ளே நுழைய முடியாது. ஸ்பெயினில் பிரதமர், அமைச்சர்கள் போன்ற பல உயர் முக்கியஸ்தர்கள் வட்டத்தில் மாபெரும் செல்வாக்கு கொண்டவர் அவர்.

அப்படிப்பட்டவர் வீட்டை வட்டமிட்டு சரியாக முந்நூறு அடி தொலைவில் ஒரு வீட்டு அவுட் ஹவுஸில் வாடகைக்குப் போய்த் தங்கினார்கள் கிங்கரர்கள். பத்து நாளாயிற்று. இருபது நாளாயிற்று. மனிதர் எப்போது வருகிறார் என்று தெரியவில்லை. வீட்டில் எப்போதும் லைட் எரிந்தது. காவலர்கள் நடமாட்டம் இருந்தது.

என்ன பிரச்னை என்றால், அவருக்கு எங்கே ஆபீஸ், தினசரி அங்கே போவாரா அல்லது வேறெங்கே போவார், என்ன செய்வார் என்று யாருக்கும் தெரியாது. பொதுவாக சம்பளம் வாங்க மட்டும் ஏதோ ஒரு ஆபீஸுக்குப் போவார் போலிருக்கிறது. அதுவும் எந்த ஸ்டேஷன் என்று தெரியாது. அத்தனை ரகசிய போலீஸ் அதிகாரி.

எனவே, இருபத்து நான்கு மணிநேரமும் வீட்டில் வைத்த கண்ணை வாங்காமல் காத்திருந்து இருபத்து ஆறாவது நாள் ஆளைப் பார்த்துவிட்டார்கள். ஒரு குத்துமதிப்பாகத்தான். போட்டோ அடையாளம் கூடக் கிடையாது. அவர் வண்டியிலிருந்து இறங்கிய தோரணை, மற்ற செக்யூரிடி ஆட்கள் சுற்றி வந்த பவ்யம் ஆகியவற்றைக் கொண்டு அனுமானித்தார்கள்.

சரி, போட்டுவிடலாம் என்று முடிவு செய்து ஒரு பெரிய சாலை பெருக்கும் துடைப்பத்தை எடுத்துக்கொண்டு, தொப்பி ஒன்றை மாட்டிக்கொண்டு, முழங்கால் சைஸ் பேண்ட் ஒன்றைப் போட்டுக்கொண்டு வீதிச் சேவை செய்பவர்கள் மாதிரி களத்தில் இறங்கினார்கள்.

அண்ணன் ஜேம்ஸ்பாண்ட், மறுநாள் காலை வீட்டை விட்டு வெளியே வந்த நேரம் ஏழு பேரும் அவருக்கு இருபதடி தூர சுற்றளவில் தயாராக இருந்தனர். செக்யூரிடிகள் திரும்பிப் பார்க்கவோ, தடுக்கவோ அவகாசம் தராமல் படபடவென்று அவரை சுட்டுத் தீர்த்துவிட்டு ஓடியே போனார்கள்.

கண்ணிமைக்கும் நேரம். வீதியெங்கும் புகை மண்டலம். புழுதி மண்டலம். ரத்த மண்டலம். ஒன்றிரண்டு செக்யூரிடிகளும் அடிபட்டு விழுந்தார்கள் என்றாலும் இறக்கவில்லை. மெலிடன் மன்ஸனாஸ் மட்டும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகக்கூட அவகாசம் தராமல் உயிரை

விட்டிருந்தார்.

சரியாக ஏழு குண்டுகள். ஏழு திசையிலிருந்து வந்த குண்டுகள். நெற்றி. மார்பு. வயிறு. வலது தோள். பின் மண்டை. இடுப்பு. ஏழு ஓட்டைகள். ஏழு ரத்தக் குளங்கள்.

அலறிவிட்டது ஸ்பானிஷ் அரசாங்கம். இரண்டு மணிநேரத்தில் எமர்ஜென்சி மாதிரி ஒரு சூழ்நிலைக்கு தேசத்தைக் கொண்டு வந்து ஐம்பதாயிரம் போலீஸாரை ஏவி விட்டார்கள். இ.டி.ஏ. என்று எங்கே எந்தக் கொசு இருந்தாலும் கொன்று திரும்பு என்று உத்தரவு. அல்லது பிடித்துக்கொண்டு வந்து சேர்.

பாஸ்க் மொழிப் பிரதேசம் முழுவதும் போலீஸ் தலைகளால் நிரம்பியது. வீடு வீடாகப் புகுந்து தேடினார்கள். வீதி வீதியாக ரெய்டு போனார்கள். டீக்கடை டீக்கடையாக விசாரித்தார்கள். வீதியில் தென்பட்ட ஓர் ஆண் தலையையும் விட்டுவைக்கவில்லை. அள்ளிக்கொண்டு போய் விசாரணை என்கிற பெயரில் நிஜாரை உருவி பேஜார் பண்ணிவிட்டார்கள்.

உண்மையில் போலீஸ் வசம் அப்போது சிக்கிய இ.டி.ஏ.வினர் மிகவும் சொற்பம். ஏழெட்டுப் பேர் இருந்தால் அதிகம். ஆனால் சுமார் நானூறு அப்பாவி மக்கள் அகப்பட்டு அவதிப்பட்டார்கள். ஒரு ஜேம்ஸ் பாண்ட் உயிர் போனது பெரிய விஷயமில்லை. இப்படி பட்டப்பகலில் இ.டி.ஏ.வினர் நடு ரோடில் நிற்கவைத்து ஓர் அதிகாரியைச் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள் என்றால் எப்பேர்ப்பட்ட துணிச்சல், என்ன நெஞ்சுரம், கொடூரம்! இவர்களை வளரவிட்டால் தேசம் என்னாகும்?

அந்தக் கவலைதான். உடனடியாக ரகசிய போலீஸ், உளவுத்துறை இரண்டு அமைப்பிலும் இ.டி.ஏ.வைக் கவனிக்கவென்று தனியொரு செல் அமைக்கப்பட்டது. ஒவ்வோர் செல்லிலும் ஐம்பது பேர் நியமிக்கப்பட்டார்கள். அவர்களது பணி, நாளெல்லாம், வாரமெல்லாம், வருஷமெல்லாம், வாழ்க்கையெல்லாம் பாஸ்க் பிரதேசத்தில் தவம் கிடப்பது மட்டுமே. சம்பளம் தபாலில் வீட்டுக்கு வந்துவிடும். பெண்டாட்டி, பிள்ளைக் குட்டிகளை அரசாங்கம் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும். அவர்கள் லீவு போடாமல், ஃப்ராடு பண்ணாமல் ஒழுங்காக பாஸ்க் மாகாணத்தில் சுற்றித் திரிந்து இ.டி.ஏ.வின் நெட் ஒர்க்கைக் கண்டுபிடித்து ஒழிக்க வேண்டும். அவ்வளவுதான்.

சொல்லிவிட்டார்கள். அத்தனை சுலபமா? இதில் மிகப்பெரிய காமெடி என்னவென்றால், எப்போது இ.டி.ஏ.வுக்கென்று தனியொரு செல் அமைத்து உளவு அதிகாரிகள் பாஸ்க்குக்கு குடிபெயர்ந்து வந்தார்களோ, அதே காலகட்டத்தில் இ.டி.ஏ. திட்டமிட்டு ஐம்பது பேரை மாட்ரிடுக்கு அனுப்பி வைத்தது.

ஐம்பது பேர். ஐம்பது அசைன்மெண்ட். சிறியதும் பெரியதுமாக. வீரியம் அதிகமானதும் குறைவானதுமாக. நீ ஐம்பதா? நான் ஐம்பது என்கிற கணக்கில்லை அது. ஒரு பெரிய ஆட்டம் ஆடிப் பார்த்துவிடுவது என்கிற திட்டம். மிகுந்த பொருட்செலவை உள்ளடக்கிய திட்டங்கள்தான் என்றாலும் துணிந்து இறங்கினார்கள்.

அவற்றில் மிக முக்கியமான சிலவற்றை மட்டும் அடுத்து பார்க்கலாம்.